27.04.2026

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் - II, திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 671/2024**
**எ.ம.சா. - 1**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் நாள் 1969 ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி உதவியாளர் திரு. எம். கனகலிங்கம் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனம் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**முதல் விசாரணை (2ம் எதிர் மனுதாரர் தரப்பில்) :**

நான் தற்போது திருவெறும்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்வானதன் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகியிருக்கிறேன். சம்மனில் கண்ட குற்ற எண். 11/2024 வழக்கு கோப்பை எடுத்து வந்திருக்கிறேன். இந்த வழக்கில் குற்ற இறுதியறிக்கை ஓட்டுநர் ராம்கி த/பெ ராஜேந்திரன் என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த இறுதியறிக்கை சா.சா.ஆ.1. ஆகும். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகன எண். TN 82 K 8399 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சா.சா.ஆ.2. ஆகும். குற்ற வழக்கு சிசி 923/2025 ன் கீழ் நீதித்துறை நடுவர் எண்.6 திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் விசாரணையில் நிலுவையில் இருந்து வருகிறது.

**குு.வி (மனுதாரர் தரப்பில்)**

இந்த வழக்கில் விபத்துக்கு காரணம் TN 82 K 8399 என்ற வாகனத்தின் ஓட்டுநர் ராம்கி த/பெ ராஜேந்திரன் ஆவார் என்றால் சரிதான். அவர் மீது தான் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்தவர் எந்த

27.04.2026

விதத்திலும் விபத்துக்கு காரணமில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் விவரங்கள் மோட்டார் வாகன ஆய்வாளரை கேட்டால் தான் தெரியும் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அவரது கையொப்பம் பெறப்பட்டது.

சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.II,
திருச்சிராப்பள்ளி.